சார்பு நீதிமன்றம், இலால்குடி.

OS.No.81/2025

2026ம் ஆண்டு ஜூன் 25-ம் நாள் வியாழன்கிழமை PW1 சாட்சியான வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டு 54 வது விதி 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.P.சக்திவேல், Gr-II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் - கருப்புசாமி
த/பெ - சைவசாமி
வயது - 44

**<u>முதல் விசாரணை</u>**

நான் வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர். வாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. 30.07.2018 ஆம் தேதியிட்ட கடன் விண்ணப்பம் **வா.சா.ஆ.1**. 01.08.2018 ஆம் தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதம் அசல் **வா.சா.ஆ.2**. 01.08.2018 தேதியிட்ட கொதுவை ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.3**. 22.07.2021 ஆம் தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.4**. 14.05.2024 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர்அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.5.** அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.6**. 25.06.2024 ஆம் தேதியிட்ட கடன் கணக்கு பட்டியல் கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.7**. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

/signed/
கருப்புசாமி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.06.25 18:38:11 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி